

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 20-02-2025


# இந்தியைத் திணிக்கவே இந்தக் கல்விக் கொள்கை!

தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கம் இந்தியைத் திணிப்பது அல்ல என்றும், தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டம் என்றும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், நாட்டு மக்கள் காதில் பூ சுற்ற நினைக்கிறார். வேண்டுமென்றே தமிழ்நாட்டில் சிலர் அரசியல் செய்கிறார்களாம். மாணவர் மத்தியில் சமச்சீரான போட்டித் தளத்தை அவர் உருவாக்கப் போகிறாராம். இந்தி மட்டுமல்ல; எந்த மொழியையும் யார் மீதும் திணிக்க மாட்டார்களாம். இப்படி எல்லாம் சொல்வதன் மூலமாக 'தர்மேந்திரராக' தன்னைக் காட்டிக் கொள்ள நினைக்கிறார் அவர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசானது கல்வியை வளர்க்க தேசியக் கல்விக் கொள்கையைக் கொண்டு வரவில்லை. இந்தியைத் திணிக்கவே அதனைக் கொண்டு வருகிறது.

**"புதிய கல்விக் கொள்கை என்ற மத யானை தமிழகத்திற்குள் புகுந்து, "கல்விச் சிறந்த தமிழ்நாட்டை" நாசப்படுத்திடவோ, காலங்காலமாக நாம் போற்றி வரும் சமூக நீதி மற்றும் சம நீதிக் கொள்கைகளுக்குக் கேடு ஏற்படுத்திடவோ அனுமதிக்கக் கூடாது. வருமுன் காப்பதே அறிவுடைமை!"** என்று இப்படி ஒரு கல்விக் கொள்கை வரப் போகிறது என்பதை உணர்ந்து 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் தேதியன்று அறிக்கை கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு கல்வியாளர் குழுவை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைத்தார்கள். இக்குழுவின் அறிக்கை 28.7.2019 அன்று மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சருக்கு திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக நேரில் கொண்டு சென்று தரப்பட்டது.

**'தாய்மொழிக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது' என்று அப்போதும் பொய்யாக நடித்தது ஒன்றிய அரசு. இப்படி வாய் வார்த்தைக்குச் சொல்வதைக்கூட ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்கள் எதிர்த்தன. ஏனென்றால் அவை முழுக்க முழுக்க இந்தியில் செயல்படுபவை. உடனே, "ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி கல்வி என்பது கட்டாயமில்லை. மாநில அரசுகள் விருப்பத்துக்கு ஏற்ப முடிவு செய்யலாம்" என்று அப்போதைய ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் கூறினார். தாய்மொழிக்கு முக்கியத்துவம் என்பதை தொடக்கத்திலேயே மறுத்துவிட்டது ஒன்றிய அரசு.**

2021 ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்ட பா.ஜ.க. அரசு, தமிழில் முதலில் வெளியிடவில்லை. இதுதான் தமிழுக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவம் ஆகும்.

இந்தக் கல்விக் கொள்கையில் தமிழ் வழியிலான வகுப்புகள் பற்றிக் கூறப்படவில்லை. தமிழ் மொழி சிறப்புப் பாடமாகவோ, முக்கியப் பாடமாகவோ பள்ளிகளில், கல்லூரிகளில் கற்பிக்கப்படும் என்றும் கூறப்படவில்லை. 'அடிப்படையிலான தமிழ்' என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் **மும்மொழிக்கொள்கை** என்ற சொல் 7 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மும்மொழிக்கொள்கை** நடைமுறைப்படுத்தப்படும் என்றும்,

மாநிலங்கள் பிராந்தியங்கள், மற்றும் மாணவர்களின் விருப்பப்படி பள்ளி மாணவர்களுக்கு **மும்மொழிக் கொள்கை** அடிப்படையில் மூன்று மொழிகள் கற்பிக்கப்படும் என்றும்

மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் **மும்மொழிகளில்** இரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும்

மாணவர்களிடையே பலமொழி ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு **மும்மொழிக் கொள்கை** அறிமுகப்படுத்தப் படுகிறது என்றும்

பள்ளி மற்றும் உயர்கல்வி நிலைகளில் நடைமுறைப்படுத்தப் படும் **மும்மொழிக் கொள்கையில்** ஒருமொழியாக **சமஸ்கிருதம்** இருக்கும் என்றும் அதில் இருக்கிறது.

இந்தியை வளர்க்கத் தடையாக இருப்பது ஆங்கிலம்தான். ஆங்கிலத்தை அகற்ற அவர்களுக்கு ஒரு திட்டம் தேவை. அதற்காகத்தான் தாய் மொழியை வளர்க்கிறோம் என்று கிளம்புகிறார்கள்.

ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அந்த இடத்தில் இந்தியை உட்கார வைப்பதும், இந்தியை உட்கார வைத்த இடத்தில் சமஸ்கிருதத்தை உட்கார வைப்பதும்தான் அவர்களது நோக்கம். ஆங்கிலத்தை அகற்றுவதற்கு ஒரு தந்திரம் தேவை. அதற்குத்தான் தாய்மொழி பம்மாத்து. தாய்மொழியில் படிக்கலாமே என்று சொல்லி ஆங்கிலத்தை அகற்றுவது இதன் சதித்திட்டம் ஆகும்.

தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் தருகிறோம் என்கிறார்கள். தாய் மொழிக் கல்வியைக் கற்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறார்களா? இல்லை.

**கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் பாடம் இருக்கிறது. உண்மைதான். ஆனால் தமிழ் கற்பிக்க தமிழாசிரியர்கள் கிடையாது. இப்படித்தான் இருக்கிறது அவர்கள் தாய் மொழியை வளர்த்தெடுக்கும் லட்சணம். கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஆங்கிலம், இந்தி ஆகியவை கட்டாய மொழிகளாகவும், 6 முதல் 8 ஆகிய வகுப்புகளில் அந்தந்த மொழிகள் விருப்பப் பாடமாகவும் இருக்கிறது. தமிழ்நாட்டில் 49 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் இருக்கிறது. இப்பள்ளிகளில் தமிழ் கற்றுத் தர ஒரு தமிழாசிரியர் கூட இல்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்தி ஆசிரியர்களாக 100 பேர் இருக்கிறார்கள். சமஸ்கிருத ஆசிரியர்களாக 53 பேர் இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் ஒருவர் கூட இல்லை. தர்மேந்திர பிரதான் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வார்?**

••





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 18.2.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் டாக்டர். கோ. பன்னீர்செல்வம், முரளிதரன், பேராசிரியர் டாக்டர். என். சந்திரசேகர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணை தலைவர் எம்.பி. விஜயகுமார், (ஓய்வு) ஆகியோர் உள்ளனர்.

## மாநிலங்களுக்கான கல்வி நிதியை மறுப்பது கூட்டாட்சியை அழிக்கும் செயல்!

# ஒன்றிய பா.ஜ.க., அரசின் செயல் குறித்து 'தி இந்து' ஆங்கில நாளேடு விமர்சனம்!

சென்னை, பிப்.20-

மாநிலங்களுக்கான கல்வி நிதியை ஒன்றிய அரசு மறுப்பது கூட்டாட்சியை அழிக்கும் செயல் என்று "தி இந்து" ஆங்கில நாளேடு விமர்சித்துள்ளது.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி வழங்கப்படும் என்ற ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சை சுட்டிக் காட்டி "தி இந்து" ஆங்கில நாளிதழ் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அதில், தமிழ்நாட்டில் 1968 ஆண்டு முதலே இருமொழிக்கொள்கைதான் பின்பற்றப்படுகிறது என்றும், இக்கல்விக் கொள்கை சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில், மும்மொழி கொள்கையை வலியுறுத்தும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்று கொள்ள வேண்டும் என அழுத்தம் கொடுப்பது எந்தவகையில் நியாயம் என்றும் கேள்வி எழுப்பியுள்ளது. தேசிய கல்விக்கொள்கை மூலம் மாநிலங்களின் அதிகாரத்தை பறிக்க ஒன்றிய அரசு முயற்சி செய்வதாக "தி இந்து" ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது.

மாநிலங்களுக்கான கல்வி நிதியை வழங்க ஒன்றிய அரசு மறுப்பது கூட்டாட்சியை அழிக்கும் செயல் என்றும் 'தி இந்து' ஆங்கில நாளிதழ் சாடியுள்ளது. ஒன்றிய அரசின் செயல், சம்பந்தப்பட்ட கல்வி திட்டத்தின் நோக்கத்தையே கேள்விக்குறியாக்குகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கான 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் கல்வி நிதியை ஒன்றிய அரசு விடுவிக்காமல் இருப்பதால், மாநிலத்தில் 40 லட்சம் மாணவர்கள் மற்றும் 32 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசியல் நோக்கங்களுக்காக மும்மொழிக்கல்விகொள்கையை எதிர்க்கிறார்கள் என்று குற்றம்சாட்டுவது தவறு என்று 'தி இந்து' ஆங்கில் நாளேடு தெரிவித்துள்ளது. மாநிலங்களுக்கான கல்வி நிதியையும், தேசிய கல்விக் கொள்கையையும் ஒன்றாக இணைப்பது தேவையற்றது என்றும், இரண்டையும் தனித்தனியாக பிரிக்க வேண்டியது அவசியம் என்றும் 'தி இந்து' ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

## மதுரை மாநகர் மாவட்ட கழக மாணவர் அணி சார்பில்

## முதல்வர் பிறந்த தினத்தை முன்னிட்டு திராவிட கோப்பை கிரிக்கெட் திருவிழா

# சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் நடைபெறுகிறது!

மதுரை, பிப். 20-

மதுரை மாநகர் மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த தினத்தை முன்னிட்டு திராவிட கோப்பை கிரிக்கெட் திருவிழா என்ற கிரிக்கெட் போட்டிகள் சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பாக கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த தினத்தை முன்னிட்டு இரண்டு நாட்கள் திராவிட கோப்பை கிரிக்கெட் திருவிழா கிரிக்கெட் போட்டிகள் நடைபெற உள்ளன. மதுரை கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிக்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு என்ற துரை கோபால்சாமி தலைமை வகிக்கிறார். சிறப்புமிக்க இப்போட்டியை முதல் நாளான 22ந்தேதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., துவக்கி வைக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணி வரை தொடர்ச்சியாக கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றன. அதன் பின்பு 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் திருப்பதி, மதன் மோகன், அரி சங்கர், நித்திய தர்ஷினி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். முன்னாள் துணை மேயர் மிசாபாண்டியன், பகுதி செயலாளர்கள் சு.பா.கண்ணன், பி. கே.செந்தில் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்துகின்றனர்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் பொன் முத்து ராமலிங்கம், பெ.குழந்தை வேலு, தி.மு.க. மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி ஆகியோர் பரிசுகளை வழங்குகின்றனர்.

போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக 50ஆயிரம் ரொக்க பணம் மற்றும் சுழற் கோப்பையும், இரண்டாம் பரிசாக 30ஆயிரம் ரொக்க பணம் மற்றும் சுழற் கோப்பையும், மூன்றாம் பரிசாக 20ஆயிரம் ரொக்கப் பணம், நான்காம் பரிசாக பத்தாயிரம் ரொக்க பணம் வழங்கப்படுகிறது.

அதேபோன்று சிறந்த மட்டை வீரர் மற்றும் பந்து வீச்சாளருக்கு தலா ஐந்தாயிரம் ஊக்கத் தொகையும் வழங்கப்படுகின்றன.

முடிவில் வட்டக் கழகச் செயலாளர்கள் தஞ்சை மதி, யோகராஜ், முகமது ரபிக், நாகையா மற்றும் மாணவர் அணி துணை அமைப்பாளர் சந்துரு உள்ளிட்டோர் நன்றி கூறுகின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், மாணவர்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளனர்.

# மும்மொழிக் கொள்கை தாய்மொழியின் உயிரை உறிஞ்சிவிடும்!

**இந்தி என்ற மொழி
தன்னளவில் இயங்குவது
அதன் உரிமை**

**இன்னொரு
தேசிய இனத்தின்மீது
திணிக்கப்படும்போது
அது புல்லுருவிபோல்
உள்ளிருந்து
தாய்மொழியின்
உயிரை உறிஞ்சிவிடும்**

**இந்தியின்
ஆதிக்கம் அதிகமான
மராத்தி போன்ற மொழிகளுக்கு
நேர்ந்த கதி அதுதான்**


**தமிழுக்கும்
அது நேர்ந்துவிடக்கூடாது
என்றுதான்
மும்மொழிக் கொள்கையை
மும்முரமாய் எதிர்க்கிறோம்**

**மும்மொழிக் கொள்கையை
ஏற்றால்தான் நிதி தருவோம்
என்பது
விஷத்தைச் சாப்பிட்டால்தான்
சோறு போடுவோம்
என்பது போன்றது**

**ஏற்றுக்கொள்ள முடியாது**

**தமிழ்நாட்டு அரசின்
நிலைப்பாட்டோடு
தமிழர்கள் கெட்டியாக
ஒட்டி நிற்கிறார்கள்**

**அறிஞர் அண்ணாவும்
உடன் இருக்கிறார்**



கவிப்பேரரசு
வைரமுத்து